# பெருநகர
# சென்னை மாநகராட்சி

EDP CELL * CORPORATION OF CHENNAI *
- 3 SEP 2018

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

ஆண்டு சந்தா ரூ. 2,000/-

மலர் : 24 இதழ் : 1222 நாள் : 30 – 08 – 2018

## 1. மண்டலம்–6 /வருவாய்துறை

ம.அ.6./வ.து.ந.க.எண்.ஆர்1/1038/2018

### ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–6, வார்டு–77, டிமலஸ் சாலை வணிக வளாகத்தில் முதல் தளத்தில் காலியாக உள்ள மூன்று கடைகள் குத்தகை அடிப்படையில் வழங்க ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி உரிய படிவத்தில் வரவேற்கப்படுகின்றன.

**கடைகளின் விவரம் பின்வருமாறு:**

| வ.எண் | ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விவரம் | |
|---|---|---|
| 1. | ஏலம் / ஒப்பந்த விண்ணப்பப்படிவத்தின் விலை | ரூ.413/– (வரைவோலையாக மட்டும்) |
| 2. | செலுத்த வேண்டிய முன் வைப்பு தொகை | ரூ.5000/– (வரைவோலையாக மட்டும்) |
| 3. | ஒப்பந்தம் திறப்பு மற்றும் ஏலம் விடப்படும் தேதி மற்றும் நேரம் | 10.09.2018 மாலை 3.30 மணிக்கு |
| 4. | ஏலம் நடக்கும் இடம் | மண்டல அலுவலகம்–6, எண் 5, ஆண்டர்சன் சாலை அயனாவரம், சென்னை–600 023. |

ஒவ்வொரு கடையின் ஏலத்திற்கு பிறகு ஒப்பந்ததப்புள்ளிகள் வருகை புரிந்த ஒப்பந்தப்புள்ளிதாரர்கள்/ ஏலதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஏலம் விட குறிப்பிடப்பட்ட நாளில் ஏதாவது காரணத்தினால் பொது விடுமுறை என்று அறிவிக்கப்பட்டால் ஏலம் உடனடியாக அடுத்து வரும் மறு வேலை நாள் அன்று குறிப்பிட்ட இடத்தில் மற்றும் நேரத்தில் நடைபெறும்

மூடி சில் வைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தம்/ஏலம் நடைபெறும் நாள் அன்று மாலை 3.00 மணிவரை பெறப்படும்.

அ)மூன்று வருடத்திற்கு குறையாமல் மாத குத்தகை அடிப்படையில் விட உத்தேசிக்கப்பட்டுள்ள கடைகள் பற்றிய விவரங்கள், விதிமுறைகள் ஆகியவை ஒப்பந்தப்புள்ளி/ஏல விண்ணப்பத்துடன் வழங்கப்படும். ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி விண்ணபத்துடன், தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியில் எடுக்கப்பட்ட ரூ. 5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்)த்துக்கான வங்கி வரைவோலை “REVENUE OFFICER CORPORATION OF CHENNAI என்ற பெயரில் எடுக்கப்பட்டு இணைக்கப்பட வேண்டும். வங்கி கேட்பு காசோலை இணைக்கப்படாத மற்றும் குறைந்த தொகைக்கான வங்கி வரைவோலை இணைத்து அனுப்பப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்படும். ஏலத்தில் கலந்து கொள்பவர்களும் பிணை வைப்புத் தொகை ரூ.5000/–ஐ (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வங்கி வரைவோலையாகத்தான் செலுத்த வேண்டும்.

ஆ) ஒப்பந்தபுள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையில் வைத்து சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பந்தபுள்ளிகள் குறிப்பிட்ட நாள் மற்றும் குறிப்பிட்ட நேரத்திற்குள், மண்டல அலுவலர் மண்டலம்–6 அவர்களுக்கு விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்திட அதற்கான பெட்டி மண்ட அலுவலகம், மண்டலம்–6ல் உள்ளது. மேடை ஒன்றுக்கு ஒரு விண்ணப்பம் வீதம் அனுப்பப்பட வேண்டும். மேலும் விண்ணபத்துடன் இருப்பிட ஆவணம் ஒன்றினை (குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, கடவுச்சீட்டு, வங்கி கணக்கு புத்தகம், ஆதார் அட்டை, ஒட்டுநர் உரிமம் இவற்றின் நகல் ஏதேனும் ஒன்றினை) இத்துடன் இணைத்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.